**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.142/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : ரங்கசாமி |
| Father's Name/ Husband's Name | : எல்லப்பன் |
| Village & Taluk | : சோ. குப்பம் |
| Calling | : ஓட்டுநர் |
| Age | : 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். பட்டியல் சாட்சி–2 வளர்மதி எனது மனைவி ஆவார். கடந்த 2021ம் வருடம் ஒரு நாள் மதிய வேலையில் எனது மனைவி எங்களது நிலத்தில் இருந்தபோது அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் வந்து என் மனைவியை திட்டி தாக்கி, பூச்சி கொல்லி மருந்தை முகத்தில் அடித்துவிட்டு ஓடிவிட்டார்கள். ஆஜர் எதிரிகள் என் மனைவியை தாக்கவில்லை. அவரை செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். இது சம்பந்தமாக நான் சத்தியமங்கலம் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 16.12.2021ம் தேதி மதியம் 02.30 மணிக்கு எனது மனைவி எங்களது நிலத்தில் இருந்தார் என்றால் சரிதான். அப்போது எதிரிகள் முன் விரோதத்தில் அங்கு வந்து எனது மனைவியை கல் மற்றும் தடி கொண்டு தாக்கினார்கள்

என்றால் தெரியவில்லை மேலும், பூச்சி கொல்லி மருந்தை அவர் முகத்தின் மீது தெளித்துவிட்டனர் என்றால் தெரியவில்லை. நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

SD/-B.VIDHYA,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.142/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : வளர்மதி |
| Father's Name/ Husband's Name | : ரங்கசாமி |
| Village & Taluk | : சோ. குப்பம் |
| Calling | : விவசாயம் |
| Age | : 38 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1 ரங்கசாமி எனது கணவர் ஆவார். கடந்த 2021ம் வருடம் ஒரு நாள் மதிய வேலையில் நான் எங்களது நிலத்தில் இருந்தபோது அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் வந்து என்னை திட்டி தாக்கி, பூச்சி கொல்லி மருந்தை முகத்தில் அடித்துவிட்டு ஓடிவிட்டார்கள். ஆஜர் எதிரிகள் என்னை தாக்கவில்லை. காயமடைந்த நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். இது சம்பந்தமாக எனது கணவர் சத்தியமங்கலம் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தார். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 16.12.2021ம் தேதி மதியம் 02.30 மணிக்கு நான் எங்களது நிலத்தில் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது எதிரிகள் முன் விரோதத்தில் அங்கு வந்து ன்னை கல் மற்றும் தடி கொண்டு தாக்கினார்கள் என்றால் யார்

தாக்கினார்கள் என்று தெரியவில்லை. மேலும், பூச்சி கொல்லி மருந்தை என் முகத்தின் மீது தெளித்துவிட்டனர் என்றால் யார் என்று தெரியவில்லை. நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

SD/-B.VIDHYA,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.